**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.708/2023</u>**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை **பி.வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயராகவன் | தொழில் | விவசாயம் |
| த/பெ | நாச்சிமுத்துக்கவுண்டர் | கிராமம் | முண்டுவேலம்பட்டி |
| வயது | 57 | தாலுகா | தாராபுரம் |
| | | மாவட்டம் | திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்துக்கள் சுப்புராய கவுண்டருக்கு பாத்தியப்பட்டவை என்று சொன்னால் சரிதான். அவருக்கு ரங்கசாமி கவுண்டர் மற்றும் முருகசாமி கவுண்டர் ஆகியோர் மக்கள் என்று சொன்னால் சரிதான். சுப்புராய கவுண்டரும் ரங்கசாமி கவுண்டரும் இறந்த பிறகு ரங்கசாமி கவுண்டரின் மகன் நாச்சிமுத்து மற்றும் முருகசாமி ஆகியோர் மேற்படி சொத்துக்களை பாகம் செய்து கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். ரங்கசாமி கவுண்டருக்கு நாச்சிமுத்துகவுண்டருடன் வாதியும் ஒரு வாரிசு என்றாலும் அதை மறைத்து கடந்த 1985 ஆம் வருடம் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதியை விட்டுவிட்டு மேற்படி நாச்சிமுத்து கவுண்டரும் முருகசாமி கவுண்டரும் பாகம் செய்து கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

2. நாச்சிமுத்து கவுண்டர் வனத்துறையில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டரிடம் மேற்படி பாகம் குறித்து கேட்டபோது தவறு நடந்துவிட்டதாகவும் வாதிக்கு பாகம் தருவதாகவும் சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. மீண்டும் பாகம் செய்வதற்கு செலவு அதிகமாகி விடும்

என்பதால் முருகசாமி கவுண்டர் ஒத்துக் கொள்ள மாட்டார் என்று நாச்சிமுத்து கவுண்டர் வாதியிடம் சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை நாச்சிமுத்து கவுண்டரும் வாதியும் ஒன்றாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தை வாதியும் நாச்சிமுத்து கவுண்டரும் பகிர்ந்து கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தரிசு நிலமாக இருந்தது என்று என்றாலும் அது நாச்சிமுத்து கவுண்டரும் வாதியும் தான் தென்னை மரங்களை நட்டு மேம்படுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு என்னுடைய தகப்பனார் என்ன சீர்வரிசை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் எனக்கு அப்போது எட்டு வயது இருந்ததால் தெரியாது. வனத்துறையில் ஃபாரஸ்ட் கார்டாக பணிபுரிந்து வந்ததால் அவருக்கு அதிக சம்பளம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அவர் வனவராக பணிவு ஓய்வு பெற்றார்.

3. பாகம் பிரித்த சங்கதி வாதிக்கு முன்னமே தெரியும் என்றாலும் அவர் ஏற்கனவே வாய்மொழியாக தனக்கு பாகம் வேண்டாம் என்று விடுதலை செய்து கொடுத்தார் என்று நான் கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. வாய்மொழியாக தன்னுடைய பாக உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. வாதியும் நாச்சிமுத்துவும் என்னுடன் சேர்ந்து தாவா சொத்திலிருந்து வந்த வருமானத்தை பகிர்ந்து கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. வசந்தாமணி என்னுடைய சகோதரி நவீன் பிரசாத் என்னுடைய மகன். நாச்சிமுத்து இருந்ததற்கு பிறகு வசந்தாமணி எனக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு செட்டில்மெண்ட் எழுதி வைப்பதற்கு வசந்தாமணிக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு நான் 3-ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதியை விட்டுவிட்டு தாவா சொத்தை பாகம் பிரித்தது செல்லத்தக்கதல்ல என்பதால் அதன் பின்னிட்டு ஏற்பட்ட இரண்டு

செட்டில்மென்ட் ஆவணங்களும் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் 646 என்றால் சரிதான். சர்வே எண். 646/5, 646/6 என உட்பிரிவு செய்யப்பட்டு மேற்படி நிலங்களைப் பொறுத்த வருவாய்துறை ஆவணங்களில் வாதியின் பெயரும் கூட்டாக உள்ளது என்று சொன்னால் அதை தற்போது தான் மாற்றியுள்ளார்கள். வாதிக்கு நான் பாகம் கொடுக்க கடமைப்பட்டவன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து கூட்டு அனுபவத்தில் இருப்பதால் இவ்வழக்கு காலவரை சட்டத்தால் பாதிக்கப்படுவதில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.13 18:30:51 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.